**OS. 03/2017**

**நாள். 23.02.2022.**

**வா.சா. 1 –** மகேஸ்வரி.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 17 முதல் 20, 22, 24 முதல் 26, 27, 30, 34, 35, 38 முதல் 40, 43, 56 முதல் 59 மற்றும் 64ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>17 முதல் 20, 22, 24 முதல் 26, 27, 30, 34, 35, 38 முதல் 40, 43, 56 முதல் 59 மற்றும் 64ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எனக்கு 1992 ல் திருமணம் நடந்தது. திருமணம் ஆன காலம் முதல் உத்திரகோசமஙகையில் வசித்து வருகிறேன். என் உடன்பிறந்தவர்கள் நாகநாதன், நமபுராஜன், நம்புகுமார், முனியசாமி, மாரீஸ்வரன் ஆவார்கள். சேதுராஜன் என்பவர் இறந்துவிட்டார். அவரது மனைவி நாகவள்ளி. அவரது மக்கள் பவானி, திவ்யா, விஜி, ரம்யா ஆவார்கள். முனியசாமி இறந்துவிட்டார். அவரது மனைவி சேதுலெட்சமி, அவரது மக்கள் தங்கராஜ், முத்துக்குமார், கோபி என்றால் சரிதான். இவர்கள் அனைவரும் இராமேஸ்வரத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தின் சர்வே எண். 862, 2வது இலக்க சொத்தின் சர்வே எண். 1047/3 என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்துக்களுக்கு அருகில் தான் என் சகோதரர்களும், சகோதரர்களின் வாரிசுகளும் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா 1, 2 வது இலக்க சொத்துக்கள் ஆரம்பத்தில் கன்னையா தேவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா 1, 2 வது இலக்க சொத்துக்கள் மற்றும் 42 இலக்க சொத்துக்களை கன்னையா தேவர் தங்கராஜ் தேவருக்கும், ராமுத்தேவருக்கும் உயில் மூலம் பாத்தியம்கொடுத்துள்ளார்என்றால் சரிதான். ராமுத்தேவருக்கு வாரிசு இல்லை என்றால் மேற்படி சொத்தினை தங்கராஜ் தேவர் பாத்தியம் அடைந்து கொள்வதாக உயிலில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி ராமுததேவருக்கு வாரிசு இல்லாததால் மேற்படி சொத்துக்களை தங்கராஜ் தேவர் பாத்தியம் அடைந்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். அதன்படி மேற்படி சொத்த சொத்துக்களையும் தங்கராஜ் தேவர் பாத்தியம் அடைந்தார் என்றால் சரிதான். தங்கராஜ் தேவருக்கு எனது தகப்பனார் கண்ணுச்சாமி தேவர் மகன் என்று சொன்னால் சரிதான். அதன்படி உயிலில் கண்ட மொத்த சொத்துக்களையும் தங்கராஜ் தேவர் அடைந்து அனுபவம்

செய்துவந்து அதன்பின்பு அவரின் ஒரே மகனான கண்ணுச்சாமி தேவர் அடைந்து அனுபவம் செய்து வந்ததாக என்னுடைய பிராது பாரா 3 ல் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதேபோல் எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3 ல் உயிலில் கண்ட மொத்த சொத்துக்களையும் தங்கராஜ் தேவர் அடைந்து அனுபவம் செய்துவந்து அதன்பின்பு அவரின் ஒரே மகனான கண்ணுச்சாமி தேவர் அடைந்து அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்துக்கு என் தகப்பனார் கண்ணுச்சாமி தேவர் பெயரில் தான் பட்டா மற்றும் வரி ரசீதுகள் இருந்து வந்தது என்றால் சரிதான். என் தகப்பனார் கண்ணுச்சாமி தேவர் உயிருடன் இருக்கும்போதே உயிலில் கண்ட பெரும்பகுதி சொத்தை விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு என் தகப்பனார் விற்பனை செய்த சொத்துக்களை இந்த வழக்கில் நான் சோக்கவில்லை என்றால் சரிதான். என் சகோதரரான 1 ம் பிரதிவாதி நாகநாதன் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். அவர் பெரும்பகுதி நாட்களில் இராமேஸ்வரம் பகுதியில் தான் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். அதனால் என் அப்பா கண்ணுச்சாமி தேவர் பல சொத்துக்களை கிரையம் கொடுத்தபோது என் சகோதரர் நாகநாதன் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா 1 ம் இலக்க சொத்தான சர்வே எண். 862 ல் கண்ட சொத்து தற்போது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த உட்பிரிவுகளை என் சகோதரர் நாகநாதன் தான் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தபோது பிரித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் சகோதரரும் மற்றும் அவரின் வாரிசுகளும் என் தகப்பனார் கிரையம் கொடுத்ததை ஆட்சேபித்து எவ்வித நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை என் தகப்பனார் கிரையம் கொடுத்த விபரம் என் சகோதரர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் என் சகோதரர்களுடன் நேசமாக தான் உள்ளேன் சுபநிகழ்ச்சி மற்றும் துக்க நிகழ்ச்சிகளுக்கு இராமேஸ்வரத்திற்கு நான் சென்று வருவது வழக்கம் என்றால் சரிதான். தாவா 1 வது இலக்க சொத்தை என் தகப்பனார் 1995 ம் ஆண்டு 13 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 13 ம் பிரதிவாதி மேற்படி சொத்தில் 2 ஏக்கர் 25 செண்டு நிலத்தை 14 ம் பிரதிவாதிக்கு 12.04.

2001 ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் 80 செண்ட் நிலத்தை 13 ம் பிரதிவாதி 15 ம் பிரதிவாதிக்கு 01.10.2002 ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 15 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தை பலநபர்களுக்கு பிளாட்டுகளாக பிரித்து 16 முதல் 27 பிரதிவாதிகளுக்கு வெவ்வேறு கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 80 செண்டு நிலம் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அந்த கிரையதாரார்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை பரல பிளாட்டுகளாக பிரித்து 27 முதல் 60 பிரதிவாதிகள் வரை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகளும் அந்த பிளாட்டுகளுக்கு உட்பிரிவு செய்து பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை மேற்படி கிரையம் பெற்ற நபர்கள் அவரவர்கள் சொத்துக்களில் கல்தூண்கள் ஊன்றி வேலிஅடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி 13 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற காலம் முதல் மேற்படி சொத்து கிரையம் பெற்ற நபர்களின் தனித்த அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற நபர்களில் 26 ம் பிரதிவாதி, 47 ம்பிரதிவாதி, 48 ம் பிரதிவாதி, 55 ம் பிரதிவாதி ஆகியோர்கள் சுற்றி வேலி அடைத்து வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

(மதிய உணவு இடைவேளைக்காக மதியம் 2.30 மணிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் மாலை 05.00 மணிக்கு குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது)

தாவா 2 வது இலக்க சொத்தை என் தகப்பனார் 16.03.1994 ம் தேதி 61 மற்றும் 62 ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை 61, 62 ம் பிரதிவாதிகள் சேர்ந்து 63 ம் பிரதிவாதிக்கு 25.03.1998 ம் தேதி கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த 2 ம் இலக்க சொத்தை 63 ம் பிரதிவாதி தன் பெயருக்கு பட்டா மாற்றி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். தாவா 1, 2 வது இலக்க சொத்துக்கள் கிரையம் வாங்கிய நபர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தைப் பொறுத்தவரை எங்களுடைய கூட்டுஅனுபவத்தில் இருந்து வருவதாக

சொல்லி நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா 1, 2 இலக்க சொத்துக்களை நான் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1924 ம் வருடத்திய உயிலில் கண்ட சொத்துக்களை என் தகப்பனார் பாத்தியம் அடைந்து அதில் சில சொத்துக்களை என் தகப்பனார் விற்றுதான் எனக்கு திருமணம் செய்துவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பெயருக்கு பட்டா வழுங்கப்பட்ட தாவா 1, 2 இலக்க சொத்துக்களுக்கு எனக்கு பாத்தியம் இருப்பதாக சொல்லி கூட்டுப்பட்டா கேட்டு மனுத்தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் தங்கராஜுக்கு உயில் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்பதால் அது அவருடைய சுயயார்ஜித சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1, 2 இலக்க சொத்துக்களை என் தகப்பனார் 1995 மற்றும் 1994 ம் வருடம் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை நான் 2014 ம் ஆண்டில் போய் பார்த்தேன். அப்போது தான் என் அப்பா கிரையம் கொடுத்த விரபம் எனக்கு தெரியும். நானும் என் சகோதரர் மாரியும் மட்டும் பேசிக்கொள்வோம். மற்ற சகோதரர்கள் யாரிடமும் நான் பேசிக்கொள்ள மாட்டேன். எங்கள் வீட்டில் நாகநாதன் என்பது என் மூத்த அண்ணனை தான் குறிக்கும். அவர்தான் 1ம் பிரதிவாதி ஆவார். பிராதில் குறிப்பிட்டுள்ள கிரையம் பெற்ற பிரதிவாதிகளின் முகவரிகளை எனது சகோதரர் நாகநாதன் மூலம் தான் தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1, 2, 17 ஆவணங்களை என் சகோதரர் நாகநாதன் வாங்கிகொடுத்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தின் பகுதி சொத்தைப் பொறுத்து என் சகோதரர் நாகநாதன் 17.06.2013 ம் தேதி வா.சா.ஆ. 17 ஐ நகல் எடுத்துக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை என் அப்பா விற்ற விபரம் 2014 ல் தான் எனக்கு தெரியவந்ததாக நான் சொல்வது பொய் என்றும் 2013 ம் ஆண்டிலேயே எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை விற்ற விபரம் என் சகோதரர்களுக்கு நன்றாக தெரிந்த காரணத்தால்தான் அவர்கள் என்னை துாண்டிவிட்டு இந்த ஆவணங்களைக் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நானும் என் சகோதரர்களும் கூட்டு சேர்ந்துகொண்டு கிரையம் பெற்ற

பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எந்தவித பாத்தியமும் உரிமையும் இல்லை என்றும் என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

23, 53 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .

வழக்கறிஞர் ஆஜராகவில்லை. ஆகையால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

44, 48, 50 முதல் 52, 55 மற்றும் 60 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜராகவில்லை. ஆகையால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.